RAFFLES INSTITUTION
2022 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம்
**9577/1**

**தாள் 1** **16 SEPTEMBER 2022**

**TAMIL LANGUAGE AND LITERATURE** **1 hour 15 mins**

**Paper 1**

**Additional Materials: Answer Booklet**

<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

1. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாவுக்கு விடையெழுதவேண்டும்.

2. விடையைக் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3. பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் மண்டபத்திலிருந்தோ அறையிலிருந்தோ வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

4. நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம்.

More papers at www.testpapersfree.com

இவ்வினாத்தாள் 2 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.

1

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக. (35 மதிப்பெண்கள்)**


Q1. உலகமயமாக்கல் நம் பண்பாட்டைக் கட்டிக்காக்க சவால் மிக்கதாக உள்ளது.
கருத்துரைக்க.

Q2. இன்றைய இளையர்களுக்குப் 'பொறுமை' என்னும் பண்பு சிறிதும் இல்லை – விவாதிக்க.

Q3. உன் நெருங்கிய நண்பனால் உனக்கு ஏற்பட்ட தர்மசங்கடத்தை நீ எவ்வாறு
சமாளித்தாய்? அதன்வழி நீ கற்ற அனுபவங்களையும் பாடங்களையும் பற்றி விவரித்து
அது உன் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியமைத்தது என்பதையும் விளக்கி எழுதுக.

More papers at www.testpapersfree.com

Q4. பின்வரும் படத்தில் காணப்படும் சூழலை மையமாகக்கொண்டு ஒரு கட்டுரை வரைக.



முற்றும்



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

RAFFLES INSTITUTION
2022 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம்
**9577/2**

**தாள் 2** **16 SEPTEMBER 2022**

**TAMIL LANGUAGE AND LITERATURE** **1 hour 45 mins**

**Paper 2**

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இவ்வினாத்தாளில் இரண்டு பிரிவுகள் உள்ளன.

2 'அ' பிரிவில் ஒரு பனுவலும் அதனையொட்டி ஐந்து வினாக்களும் இடம்பெற்றுள்ளன. 'ஆ' பிரிவில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் இடம்பெற்றுள்ளன. இவ்விரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து இவற்றையொட்டி அமைந்த வினாக்கள் அனைத்துக்கும் சொந்த நடையில் விடையெழுதவேண்டும்.

இவ்வினாத்தாள் மொத்தம் 6 பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.



More papers at www.testpapersfree.com

## “அ” பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல் 1** (32 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் தட்டச்சு செய்க.

கலைகளுள் இசை மிகச் சிறந்தது என்பர் சிலர்; இலக்கியமே மிகச் சிறந்தது என்பர் சிலர். அறிவில் கலப்பு இல்லாத காரணத்தாலும், கேட்டோர் யாவரையும் ஈர்க்கும் தன்மையாலும் இசையே சிறந்தது என்பர். மனித வாழ்வின் சிறப்பியல்பாக உள்ள மொழியால் அமையும் காரணத்தாலும், வழிவழியாக விளங்கி நிலைத்த பயன் அளித்தலாலும் இலக்கியமே சிறந்தது என்பர். மனிதன் படைத்துக்கொண்ட நாகரிகக் கருவிகளுள் மிகச் சிறந்தது மொழி. பேசுவதற்கும் எழுதுவதற்கும் உரியதாக மனிதன் படைத்துக்கொண்ட மொழி இல்லையாயின், இன்றைய நாகரிக வளர்ச்சியே இல்லை எனலாம்; மக்கள் சேர்ந்து பழக வாயில் இல்லை, அமைப்புகள் இல்லை, மன்றங்கள் இல்லை, நீதிகள் இல்லை, சட்டங்கள் இல்லை, அரசு இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, உலக வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அடிப்படையான மொழி மிகமிகச் சிறந்த நாகரிகக் கருவி எனலாம். அத்தகைய மொழியை, மொழியின் ஊடுபொருளாகக் கொண்டு அமைவதே இலக்கியம். ஆகையால் அது கலைகளில் சிறந்தது என்பது பொருந்தும்.

உலக வரலாற்றை மாற்றியமைப்பதில் மற்ற எல்லாவற்றையும் விட இலக்கியம் ஆற்றல் மிக்கது என்பர். ஏனெனில், அறிவுத் துறைகள் மனிதரின் மூளைக்கு மட்டும் எட்டி இயங்குவன. ஆனால் உணர்ச்சிக்கு வடிவங்களான இலக்கியத்துறைகள், மூளையை மட்டுமல்லாமல் மனத்தால் வாழும் வாழ்வு முழுவதையுமே இயக்குவன. மனிதன் அறிவால் அறிந்து வாழும் பகுதியைவிட, விரும்பியும் வெறுத்தும் நம்பியும் சோர்ந்தும் போற்றியும் தூற்றியும் வாழும் பகுதியே மிகுதியாகும். ஒரு சமுதாயத்தின் விருப்பு வெறுப்பு நம்பிக்கை முதலியனவற்றை வளர்த்துப் பண்படுத்துவது அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே. ஆகையால் அதுவே மனித வாழ்வைப் பெரிதும் மாற்றியமைப்பது என்பர். ஆகவே, சட்டம் அறிவியல் முதலிய எவற்றையும்விடப் பெரிய கருவியாய்ச் சமுதாயத்தை உருவாக்குவது இலக்கியம் எனலாம். அதனால் பாட்டு, காவியம், கதை முதலியன இயற்றித்தரும் புலவர்கள், சட்டம் இயற்றித்தரும் ஆட்சியாளர்களைவிட ஆற்றல் மிக்கவர்கள்; தத்துவ ஞானிகளைவிடவும் செல்வாக்கு மிக்கவர்களாய் மனிதரின் உள்ளத்தை ஆள்பவர்கள் அவர்களே என்பர்.

செய்தித்தாள்கள் ஒரு நாளுக்கு உரியன. மற்றொரு நாளுக்கு அவை உதவாமல் அழிகின்றன. அது இயல்பே. நூல்களின் வாழ்வும் அழிவும் நாட்கணக்கின அல்ல; ஆண்டுக் கணக்கின. எல்லா நூல்களும் அழிவன அல்ல. அவற்றுள் அழியாதன சில உள. அந்தச் சிலவே கலை உலகில் இலக்கியங்களாகப் போற்றத்தக்கன. முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட, அல்லது முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட



More papers at www.testpapersfree.com

இலக்கியங்களும் மாறாமல் அழியாமல் வாழ்வுபெற்று விளங்குகின்றன. தமிழ் முதலான மிகப் பழைய மொழிகளில் ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பாட்டுக்களும் நிலையான வாழ்வு வாழ்கின்றன. ஆனால் ஒரு நூற்றாண்டின் அளவில் தோன்றி மறைந்த கணக்கு நூல்களும் வரலாற்று நூல் முதலியவற்றிற்கும் கணக்கே இல்லை. கணக்கு நூல் முதலியனவும் மாறாத உண்மைகளை விளக்குகின்றன; இலக்கிய நூல்களும் அவ்வாறே மாறாத உண்மைகளை விளக்குகின்றன. ஆயின், கணக்கு நூல் முதலியனவற்றில் உண்மைகள் மட்டுமே உள்ளன. இலக்கிய நூல்களிலோ, உண்மைகளும் உள்ளன; உண்மைகளை உணர்ந்தவர்களின் அனுபவங்களும் உள்ளன. அந்த அனுபவங்கள் கலைஞர்கள் நல்கிய தனிச் செல்வங்கள்; அவர்கள் தந்த கலைவடிவங்களைவிட்டு அந்த அனுபவங்களைப் பிரித்தல் இயலாது. கணக்கு நூல்கள் முதலியவற்றில் உள்ள உண்மைகளோ அவற்றின் ஆசிரியர்களோடு தொடர்பில்லாதவை. ஏழெட்டு ஐம்பத்தாறு என்னும் உண்மை எவர் கூறினாலும் அத்தகைய உண்மையாகவே நிற்கும். ஆனால், கற்பின் பெருமையைப் கபிலர்போல் கம்பர்போல் இன்னொருவர் கூறமுடியாது. ஆகவே, உண்மை மட்டும் அல்லாமல், உண்மையை உணர்ந்தவரின் அனுபவங்களும் நமக்குக் கிடைக்கின்றன.

ஓர் இலக்கிய நூல் வெவ்வேறு மனநிலைக்கு வெவ்வேறு உணர்ச்சிகளை எழுப்ப வல்லது. ஒருவர்க்கே இளமையில் ஒருவகை உணர்ச்சியும் முதுமையில் வேறொரு வகை உணர்ச்சியும் அளிக்க வல்லது. உணர்ச்சி வடிவமான மனம், என்றும் ஒரே நிலையில் இருப்பதில்லை. ஆகவே, இலக்கிய அனுபவங்கள் பலருக்குப் பலவகையாகவும் ஒருவர்க்கே காலத்திற்கேற்பச் சில வகையாகவும் வேறுபடுகின்றன. இவ்வேறுபாடுகளும் இலக்கியத்தின் நெடுங்காலக் கவர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைகிறது எனலாம்.

வினாக்கள்

**Q1.** இலக்கியம் இசையைவிடச் சிறந்தது, ஏன்? (6 மதிப்பெண்கள்)

**Q2.** எவ்வாறு இலக்கியம் மனித வாழ்க்கையை மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்தது? (6 மதிப்பெண்கள்)

**Q3.** இலக்கிய நூல்கள் எவ்வாறு கணக்கு நூல்களிலிருந்து வேறுபடுகின்றன? (7 மதிப்பெண்கள்)

**Q4.** இலக்கிய அனுபவங்கள் மன நிலைக்கேற்ப மாறுவது ஏன்? கட்டுரைப் பகுதியின் துணைகொண்டு
விளக்குக. (5 மதிப்பெண்கள்)

**Q5.** சொற்பொருள் (8 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

பின்வரும் சொற்கள் மேற்கொண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.

i. ஈர்க்கும்

ii. ஊடுபொருளாக

iii. தூற்றியும்

Iv. நிலையான

## “ஆ” பிரிவு

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (2) (33 மதிப்பெண்கள்)

பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்துவிட்டு, விடைத்தாளில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கான விடைகளை, உம் சொந்த நடையில் தட்டச்சு செய்க.

இன்றைய மனிதர்களுடைய வாழ்வு வெகுவாக மாறியுள்ளது. மிக விரைவான தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் இதனைச் சாத்தியமாக்கியுள்ளன. உலகில் உள்ள மனிதர்களில் இந்தத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தாமல் இருப்பவர்கள் விதிவிலக்கு என்று கூறுமளவிற்கு இதன் செல்வாக்கு அதிகரித்துள்ளது. உலகமெங்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனோடு இணைந்த சமூக வலைத்தளங்களினுடைய பயன்பாடு மனிதனை அடிமைபடுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மாற்றம் ஒன்றே மாறாதது என்பது போல நாம் அனைவரும் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டு பல வருடங்களாகின்றது.

சமூக வலைத்தளங்கள் எனப்படுவைத் தூரமாய் இருக்கும் மனிதர்களையும் சமூகங்களையும் அருகாமையில் உணர வைக்கின்றது. இது உலகளாவிய கோடிக் கணக்கான பயனர்களைக் கொண்ட வலையமைப்பாகும். இது உலகமயமாதலின் பரிணாமம் என்றே கூறலாம். 1987களில் முதன் முறையாக இதற்கான அடித்தளம் இடப்பட்டது. இணையம் என்ற அஸ்திவாரம் இதற்கு வித்திட்டது. உலகின் எந்தப் திசையில் இருந்தாலும் எவ்வாறான மொழி, பண்பாடு என்பவற்றைப் பின்பற்றினாலும் அவர்களை ஒன்றிணைப்பது சமூக வலைத்தளங்களின் பெருவெற்றி எனலாம். வேறுபட்டுக் கிடந்த மக்களைச் சமூக வலைத்தளங்கள் இணைக்கத் துவங்கி நீண்ட தூரங்களில் இருந்த உறவுகளையும் இவை நெருக்கமாக்கின.



More papers at www.testpapersfree.com

ஆரம்பகாலங்களில் மனிதர்களுடைய தொடர்பாடல் கடிதங்கள் வாயிலாக இருந்தன பின்பு தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகத் தொலைபேசிகள் உருவாகின. அதன் பின்னர் கணினிகள் உருவாகின. கணினிகள் வாயிலாக மின்னஞ்சல் போன்ற ஊடகங்கள் வாயிலாக ஆரம்பித்த தொடர்பாடல் முதன் முதலில் 1997-இல் ஆறு டிகிரி (Six Degree) என்ற சமூக வலைத்தளம் உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2005-இல் வலையொளி(You Tube) எனும் செயலி உருவாகிப் பிரபலம் அடைந்தது. அதனைத் தொடர்ந்தே முகநூல்(Facebook), இயாஹூ(Yahoo) ஆகியன உருவாக்கம் பெற்றன. 2006களில் இன்றைய உலகின் பிரபலமான முகநூல்(Facebook), கீச்சகம்(Twitter) போன்ற வலைத்தளங்கள் உருவாகி உலகளவில் அதிக பயனர்களை ஈர்த்தது. இன்று இவற்றின் வளர்ச்சி உச்சத்தைத் தொட்டுள்ளது. மேலும் படவரி(Instagram), பற்றியம்(Messenger), புலனம்(WhatsApp) என பல்வகையான வலைத்தளங்கள் உருவாகி மனித சமூகத்தை வேறொரு பரிணாமத்துக்குக் கொண்டு சென்றிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. அன்றாட வாழ்வில் நாம் உணவு, தண்ணீரைத் தவிர்க்க முடியாததைப் போலவே சமூக வலைத்தளங்கள் பயன்பாடு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

- சரோஜினி

<u>பனுவல் ஒன்று</u>

சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம்

<u>பனுவல் இரண்டு</u>

குறுகிக் கிடந்த மனிதனின் உணர்வுகளைக் கனவுகளை விரிவுப்படுத்தியவைச் சமூக ஊடகங்கள்தான்தான். மனிதர்கள் வாழ்வினைக் கொண்டாட காரணமானவையும் இவைதான். புகைப்படங்கள், காணொளிகள் வாயிலாகவும் அழகான நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள இவை உதவின. விளம்பரங்கள், விரைவான தகவல்கள், முன்னறிவிப்புக்கள், உலகச் செய்திகள், சுவையான தகவல்கள் இவை அனைத்தையும் மிக விரைவாக அறிந்து கொள்ள முடிகிறது. உலகம் உள்ளங்கைக்குள் அடக்கம் என்ற நிலையைச் சமூக வலைத்தளங்களே சாத்தியமாக்கின. அன்றாடம் நம் இன்பமோ துன்பமோ அனைத்திலும் இந்த வலைத்தளங்கள் கலந்துவிட்டன. வாழ்த்துக்களும் அனுதாபங்களும் இரங்கல்களும் இங்கே தான் பகிரப்படுகின்றன. பலரது திறமைகளுக்கும் சமூக வலைத்தளங்களே களம் அமைத்துக் கொடுக்கின்றன

கடல் கடந்து, நாடு கடந்து, மனிதம் என்ற உணர்வில் பல நண்பர்களை இது உருவாக்கி இருக்கின்றது. செல்ல முடியாத நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு போன்றவற்றைப் பார்க்க முடிகிறது. நல்ல கலை வடிவங்கள், படைப்புகள், புத்தகங்களை இருந்த இடத்தில் இருந்தே பார்க்க முடிகிறது. இணைய வழியில் வீட்டில் இருந்தபடியே விரும்பியவர்களிடம் கல்வி கற்கமுடிகிறது. தேவையான தகவல்களைத் தேடவும் முடிகிறது. இந்த அசாதாரணமான காலகட்டங்களில் வீட்டில்



More papers at www.testpapersfree.com

இருந்தே வேலை பார்க்கவும் முடிகிறது. உலகமெங்கும் நடைபெறும் வன்முறைகள் பிரச்சனைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவும் முடிகிறது. அது போல பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான உதவிகள் வாய்ப்புகள் கிடைக்கவும் இந்த வலைத்தளங்கள் பெரும் உதவியாக இருக்கின்றன. உலகமெங்கும் விளம்பரங்கள், செய்திகள், தகவல்கள், வியாபாரங்கள் சமூக வலைத்தளங்களை அடிப்படையாகக் கொண்டே இடம் பெறுகின்றன.

சமூக வலைத்தளங்கள் பல நன்மைகளைத் தந்தாலும் பல தீமைகளையும் தருகின்றன. ஒரே வீட்டில் வாழ்பவர்கள்கூட உறவுகளிடையே பேசமுடியாத ஒரு தூரத்தை இவை உருவாக்கியிருக்கின்றன. அதிக நேரம் சமூக வலைத்தளங்களில் பலரும் பொழுது போக்குவதனால் கண், தலை, கை, மூளை போன்ற உடலியல் சார்ந்த நோய்கள் உருவாக இவை காரணங்களாக இருக்கின்றன. மற்றும் சமூக வலைத்தள ஈடுபாட்டால் இவர்களது தனிப்பட்ட முயற்சி, வேலை, கல்வி போன்றன பாதிக்கப்படுகின்றன. இன்றைய சூழலில் சிறுவர்கள் அதிகம் வலைத்தளங்களைப் பயன்படுத்துவதனால் தவறான பக்கங்கள் அவர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்வதனால் பல குற்ற செயல்களில் இளையர்களை ஈடுபடத் தூண்டுகிறது. சமூக வலைத்தளங்களின் தாக்கத்தால் பத்திரிகை வாசிக்கும் பழக்கம், புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் போன்றன வெகுவாகக் குறைந்துவிட்டமை வருத்தத்துக்குரியதாகும்.

“அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு” என்பது போல சமூக வலைத்தளங்களை அளவோடு பயன்படுத்துவது நன்மை தரும். பல நாடுகளில் உள்ள இளம் சமுதாயம் அதிக அளவிலான நேரத்தைச் சமூக வலைத்தளங்களில் செலவழிக்கின்றனர். இது ஆரோக்கியமானதல்ல. ஆகவே சமூக வலைத்தளங்களை ஓர் அளவோடு பயன்படுத்துவது எப்போதும் நன்மை பயக்கும். - ஜெகன்

சமூக வலைத்தலங்களின் தாக்கம்

## வினாக்கள்

**Q6** கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத்
தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று) (6 மதிப்பெண்கள்)

அன்றாட வாழ்வில் நாம் உணவு, தண்ணீரைத் தவிர்க்க முடியாததைப் போலவே
சமூக வலைத்தளங்கள் பயன்பாடு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

அ) 5-ஆம் வேற்றுமைத் தொகை



More papers at www.testpapersfree.com

ஆ) தன்மை பன்மைப் பெயர்

இ) வினையடை

**Q7** மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கட்டுரையாசிரியர் கூறக் காரணம் யாது?
(பனுவல் ஒன்று) (5 மதிப்பெண்கள்)

**Q8** கருத்துக்கள் அடிப்படையில் இரண்டு பனுவல்களும் எவ்வாறு வேறுபடுகின்றன?
(7 மதிப்பெண்கள்)

**Q9** அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பது போலச் சமூக வலைத்தளங்களை அளவோடு
பயன்படுத்துவது நன்மை தரும் என்பதை நீ ஏற்றுக்கொள்கிறாயா? கொடுக்கப்பட்டுள்ள இரு
பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு உன் கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் 140
சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

முற்றும்



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

RAFFLES INSTITUTION
2022 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம் 9577/3

**தாள் 3** **22 SEPTEMBER 2022**

**TAMIL LANGUAGE & LITERATURE** **3 hours**

## Paper 3

**Additional Materials: Answer Booklet**

### தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 கொடுக்கப்பட்டுள்ள குறிப்பைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதவேண்டும்.

இவ்வினாத்தாள் 6 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.



More papers at www.testpapersfree.com

## முக்கியக் குறிப்பு

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடை எழுத வேண்டும்.
மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

## 'அ' பிரிவு

### நாவல், சிறுகதை

1. தம் கதாமாந்தர்கள்வழி கதவு என்ற சிறுகதையில் எழுத்தாளர் கீ. ராஜநாராயணன் முன்வைக்கும் கருத்துகள் இக்காலத்துக்கும் பொருந்துமா? ஆராய்க.
(25 மதிப்பெண்கள்)

2. 'சமுதாய வீதி' என்னும் நாவலின் தலைப்பு கதையோடு பொருந்தி அமைந்துள்ளதா? ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

## ஆ' பிரிவு

### கவிதை

3. 'எறும்பு', 'இரவிலும் பகலை எதிர்பார்', என்ற கவிதைகளில் இடம்பெற்றுள்ள இலக்கிய நயங்களைப் பாராட்டி, மனித இனத்துக்கு அவை உணர்த்த விரும்பும் சமுதாயக் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (25 மதிப்பெண்கள்)

4.
i. மனிதன் அர்த்தமுள்ள வாழ்வை வாழ்தல் வேண்டும் என்பதைக் கவிஞர் அப்துல் ரகுமானின் 'கல்லின் காயம்' என்ற கவிதை வரிகள் எடுத்துரைக்கும் பாங்கினைத் தக்க சான்றுகளுடன் விவரித்து எழுதுக. (12 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

ii. ஹைக்கூ கவிதைகள் உணர்த்தும் விழுமியங்கள் இக்காலச் சூழலுக்குப் பொருந்தும் வகையில் விளக்கி எழுதுக. (13 மதிப்பெண்கள்)

## 'இ' பிரிவு

### நாடகம்

5. திருமணம் எனும் சமூகச் சிக்கல் செல்வியையும், கல்யாணியையும் அலைக்கழிக்கச் செய்தது என்பதை இரு நாடகங்களின்(ஊஞ்சல், சிங்கப்பூர் மாப்பிள்ளை) வழிநின்று ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

6. 'ஊஞ்சல்' நாடகத்தின் கருப்பொருள் இன்றைய காலத்திற்கு ஒரு நல்ல படிப்பினையாக அமையும் என்பதைக் காரணத்துடனும் சான்றுகளுடனும் விளக்கி எழுதுக.

(25 மதிப்பெண்கள்)

## 'ஈ' பிரிவு

### இலக்கியத் திறனாய்வு

7. பின்னிணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ள 'மானுடம் மறையாது' என்னும் தலைப்பிலான சிறுகதையைப் படித்துத் திறனாய்வு நோக்கில் கதைக்கரு, பாத்திரப்படைப்பு, கதாசிரியர் உணர்த்த விரும்பும் கருத்துகள் ஆகியவற்றை மட்டும் விளக்கி எழுதுக

(25 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

**8.** பின்னிணைப்பு 2-இல் கொடுக்கப்பட்டுள்ள ‘ அப்பா வந்திருந்தார்’ என்னும் தலைப்பிலான கவிதையைப் படித்து அதன் நயத்தை விளக்கி எழுதுக. கவிதையின் பாடுபொருள், பொருள் நயம், சொல் நயம் ஆகிய கூறுகளையொட்டி மட்டும் விடை அமைதல் வேண்டும்.

(25 மதிப்பெண்கள்)

**பின்னிணைப்பு 1**

## மானுடம் மறையாது

கவிதா பேருந்தில் இருந்து இறங்கினாள்.எதிர் வெய்யில் சுளீரென்று அடித்தது. மெள்ள நடந்து பேருந்து நிறுத்துமிடம் ஓரமாக இருந்த கடையில் ஒரு சோடா வாங்கினாள்.மெள்ள குடித்து முடித்து விட்டுப் புடவை தலைப்பில் வாயைத் துடைத்துக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள். அவள் பாண்டிச்சேரி பக்கத்தில் ஒரு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறாள்.

சென்னையைச் சேர்ந்த அவளுக்குத் தினமும் இவ்வளவு தூரம் பேருந்தில் வருவது சோர்வை ஏற்படுத்தும்.அது மாணாக்கர்களிடம் கோபத்தை உண்டு பண்ணும் என்று தோன்றியதால் பாண்டிச்சேரி அருகில் தன் தோழியுடன் ஒரு வீடெடுத்துத் தங்கியிருந்தாள். வாரக்கடைசியில் அப்பப்போ சென்னை சென்று வருவாள். வீட்டிற்குள் வந்தவள், உடை மாற்றிக்கொண்டு தோழியைத் தேடினாள்.தோழி பின்னால் தோட்டத்தில் உட்கார்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருந்தாள்.நேராக அவள் முன் போய் நின்றவள், “ஏண்டி, இப்படிப் பொறுப்பே இல்லாம இருக்க? நான் சாவி போட்டுத் திறந்து வரா மாதிரி யாராவது வந்தா என்னடி பண்ணுவே? கொஞ்சம் கவனம் வேண்டாமா?” கத்தினாள் கவிதா.

மெள்ளமாக தலையை நிமிர்ந்து பார்த்த வீணா,”போடி, உனக்கு வேற வேலையே இல்ல; நீ பள்ளியில தாண்டி டீச்சர், எனக்கு இல்ல; நிம்மதியா ஒரு புத்தகம் கூட படிக்க விட மாட்டா இவ” சலிப்புடன் பதில் சொன்னாள். வீணா, “நீ புத்தகம் படி நான் வேண்டாம்னு சொல்லல; ஆனா நான் உள்ள நுழைந்தது கூடத் தெரியாம இருக்கியே அதான் சொன்னேன்” விளக்கம் அளித்தாள் கவிதா. “நீயும் ஒரு டீச்சர்; ஆனா இப்படிப் பொறுப்பு இல்லாம இருக்கலாமா?”என்றாள் கவிதா. “ஐயோ,சாமி; ஆளை விடுடி, இனிமே பொறுப்பா இருக்கேண்டி” எரிச்சலுடன் பேசினாள் வீணா. “சரிடி; நீ கை,கால் அலம்பிட்டு வந்துடு; சமையல் செய்து வச்சுருக்கேன், சாப்பிடலாம் வா;” சொல்லிவிட்டு நகர்ந்தாள் வீணா.

அடுத்த வாரம், வீணாவும் கவிதாவும் பள்ளியில் இருந்து வந்தவுடன் கவிதாவும் வீணாவும் அமைதியாக காபியைக் குடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வாரம்



More papers at www.testpapersfree.com

சென்னை போக வேண்டாமென்று கவிதா முடிவு செய்து இருந்தாள். வீணாவின் பெற்றோர் சிறு வயதில் விபத்தில் இறந்து போய் இருந்தார்கள். அவளுடைய மாமா வீட்டில் வளர்ந்திருந்தாள். அவர்கள் கர்நாடக மாநிலத்தில் இருந்தார்கள். வீணா வேலை கிடைத்ததும் இங்கேயே இருந்து விட்டாள். எப்போதாவது வீணா ஊர் சென்று வருவாள்.

அதே போல் எப்போதாவது அவளுடைய மாமா இங்கே வருவார். அதனால் அவளுக்கென்று பெரிதாக யாரும் இல்லை..ஃபோன் ஒலிக்கவும் எடுத்துப் பேசினாள் கவிதா, அம்மா தான் பேசினாள்." அப்பா திடீர்னு மயக்கம் போட்டுட்டார் மா', பக்கத்து வீட்டு தனத்தின் உதவியோட ஆஸ்பத்திரி சேர்த்துட்டேன். நீ கொஞ்சம் வந்தால் நல்லா இருக்கும்", அம்மாவின் குரலில் கவலை. இவள் தான் வீட்டுக்கு மூத்தவள். அப்பாவின் சம்பளம் போதவில்லை. இவளது பள்ளி அரசாங்கப் பள்ளி ஆகும். அதனால் நிலையான சம்பளம். இவளுக்குக் கீழ் ஒரே ஒரு தங்கை. அவள் படித்துக் கொண்டு இருந்தாள். அதனால் தான் இவள் வாராவாரம் போயே ஆக வேண்டிய நிலைமை இருந்தது. இந்த வாரம் முக்கியமாக வேலை எதுவும் இல்லை என்பதால் இவள் செல்ல வேண்டாம் என்று எண்ணி இருந்தாள்.

ஆனால் அம்மாவின் அழைப்பு வந்ததால் கவிதா கிளம்பினாள். கிளம்பும் போது வழக்கப்படி வீணாவை எச்சரித்து விட்டுக் கிளம்பினாள். ஆனால் வீணா எப்பொதும் போல் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை."இவளுக்கு வேற வேலையே இல்லை" என்று சலித்துக்கொண்டு கதவை மூடிக்கொண்டாள் வீணா. ஞாயிறு சாயங்காலம் வழக்கப்படிக் கவிதா வரும் நேரம்." நான் வந்துண்டே இருக்கேன்" குறுஞ்செய்தி போட்டு இருந்தாள் கவிதா. ஆனால் அவள் பேருந்து வாகன நெரிசலில் மாட்டிக்கொண்டது.

குறுஞ்செய்தியோ செல்போன் அழைப்போ போகவே இல்லை. சரி எப்படியும் போய் விடலாம் என்று அமைதியாகக் காத்துக்கொண்டிருந்தாள் கவிதா. வீணா கவிதாவுக்காகக் காத்துக்கொண்டு வழக்கப்படி புத்தகம் படித்துக்கொண்டிருந்தாள். ஏதோ சத்தம் கேட்டது. அதுக்குள்ள வந்துட்டாளா? எழுந்தாள் வீணா. அது மெய்ன் ரோடு பக்கத்தில் இருக்கும் சந்து ஆனாலும் முட்டுச்சந்து. இவர்கள் வீடு தான் கடைசி. அதற்குப்பின் ஒரு காம்பவுண்டு சுவர். யாரோ அதில் ஏறி குதித்தார்கள். இவள் சுதாரித்துக்கொள்வதற்குள் இருவர் உள்ளே புகுந்தனர். இவளை நோக்கி கத்தியைக் காட்டினர். "மரியாதையா நகையெல்லாம் எடு" என்றனர். அவர்கள் முகத்தை மறைத்திருந்தனர். இவளால் கத்த முடியவில்லை. மெதுவாக நகர்ந்து நகை இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றாள். அப்போது வெளியில் சற்று தூரத்தில் அந்தத் தெரு முனையில் ட்யுஷன் போய்விட்டுச் சைக்கிளில் வந்து கொண்டிருந்தாள் அக்ஷரா.

தெருமுனையில் டீச்சர் வீட்டில் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அது சாயங்காலம் 6.30 மணி இருக்கும். எப்போதும் அந்த நேரத்துக்குத் திரும்பி விடும் கவிதாவைக் காணவில்லை. அக்ஷரா முதலில் கவிதா வந்து பேசிக்கொண்டிருக்கிறாள் என்று நினைத்தாள். ஆனால் ஆண் குரல் உரத்து ஒலித்தது. சந்தேகம் எழுந்தது. உடனே முதலில் வீட்டில் சென்று சொல்லலாம் என்று நினைத்தாள். வீட்டில் கத்துவார்கள், உனக்கு ஏண்டி இந்த வேண்டாத வேலையெல்லாம் என்று. அவள் மனம் கேட்கவில்லை.



More papers at www.testpapersfree.com

கையில் செல்போன் இருந்தது. ஆனால் அவள் நம்பரில் இருந்து பேச பயமாக இருந்தது. உடனே ஓடினாள், தெரு முனையின் திருப்பத்தில் இருந்த ஒரு மெடிக்கல் ஷாப்பிற்கு, அதன் பக்கத்தில் பப்ளிக் உபயோகத்திற்காக ஒரு டெலிபோன் வைத்திருந்தார்கள். அதில் இருந்து போன் செய்தாள். மறு முனையில் போலிஸ் கண்ட்ரோல் ரூம் என்றது. விஷயத்தைச் சொல்லிவிட்டு அட்ரஸ் கொடுத்து விட்டு வைத்து விட்டாள்.

அடுத்த பதினைந்து நிமிடத்தில் போலிஸ் வந்தது. திருடன் நகைகளை மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு கிளம்பினான். இரண்டு புறமும் சுற்றி வளைத்துப்பிடித்தார்கள்.அக்ஷரா அப்போது தான் தன் அம்மாவிடம் விஷயத்தைச் சொன்னாள். அவளுடைய அம்மா வழக்கம் போல் கத்த ஆரம்பித்து விட்டாள். "உனக்கு ஏண்டி இந்த வேலையத்த வேலை? நீ ஏன் இதுல எல்லாம் தலையிடுற" என்றாள் அம்மா. இவள் மெதுவாகப் பதில் சொன்னாள். "அம்மா, போன மாசம் உன் தம்பி, என்னோட மாமா ரோட்ல அடிபட்டு கிடந்த போது இத மாதிரி நினைக்காம அவருக்கு உதவி பண்ணதால தான் இன்னிக்கு மாமா உயிரோட இருக்கா, இது போல எனக்கென்னன்னு விட்டு போயிருந்தால் என்ன ஆயிருக்கும்? என்று கேட்டாள் அக்ஷரா. "அதில்லடி,போலிஸ் அது இதுன்னு வீட்டு வாசல்ல வந்தா நீ படிக்கற பொண்ணு, உங்கப்பா வேற ஊருக்குப் போயிருக்காரு. அதான் சொன்னேன்" என்றாள்.

"கவலப்படாதம்மா; நான் போன்ல பேசும்போது போலிஸ் இன்ஸ்பெக்டெர் கேட்டார் "நீ ஸ்டுடன்டான்னு; ஆமாம்னு சொன்னேன்; சரிம்மா; நீ உன்னுடைய ஐடன்டிடி வெளியிட வேண்டாம்; நாங்க பாத்துக்கரோம்னு சொல்லிட்டார் மா" என்றாள் அக்ஷரா. "சரிடி, என் பயம் எனக்கு;" சொல்லிகொண்டே நகர்ந்தாள் அம்மா. ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்யறது கூட எவ்வளவு பயம் ஏற்படுத்தி விட்டது சமுதாயம்; நினைத்துக்கொண்டே நகர்ந்தாள் அஷரா.

"சீ, கவிதா எத்தனை முறை சொல்லிட்டாங்க, எனக்குப் புத்தியே இல்ல, யாரோ ஒரு புண்ணியவதி காப்பாத்திட்டாங்க. அவங்க நல்லா இருக்கணும். இனிமேல் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்", மனதுக்குள் தன்னையே கடிந்து கொண்டு எழுந்தாள் வீணா.

- சித்ரா சுரேஷ்

பின்னிணைப்பு 2

அப்பா வந்திருந்தார் - மனுஷ்ய புத்திரன்

நேற்றிரவு ஒரு கனவு கண்டேன்
இறந்து ஏழாண்டுகளுக்குப் பிறகு என் தந்தை
முதல் முறை கனவில் வந்தார்

அப்போதுதான் எங்கள் பூர்வீக வீட்டை
எங்களுக்குத் தெரியாமல்
எங்கள் தந்தை வாங்கிய கடனுக்காக
ஜப்தி செய்ய ஆட்கள் வந்து அமர்ந்திருந்தார்கள்



More papers at www.testpapersfree.com

யாரோ ஒருவன் என் கட்டிலைக்
கழற்றிக்கொண்டிருந்தான்
இன்னொருவன் என் புத்தகங்களை
அள்ளி எறிந்துகொண்டிருந்தான்
நான் சில ரகசிய ஆவணங்களை
மறைப்பதற்காகப் போராடிக்கொண்டிருந்தேன்
அதில் நான் இழந்த காதலின்
கடிதங்களும் இருந்தன
“இவ்வளவு நாள் எங்கே போயிருந்தீர்கள்
உங்களை எங்கெல்லாம் தேடுவது?” என்றேன்
பதில் சொல்லாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டார்

ஜப்தி செய்ய வந்தவர்கள்
சீக்கிரம் வெளியே போகும்படி அதட்டினார்கள்
“ஏன் இப்படிச் செய்தீர்கள்?” என்றேன்
என் தகப்பனிடம்
அம்மா மூலையில் அமர்ந்து
அழுதுகொண்டிருந்தாள்
“போடா போய் பிச்சை எடு..” என்று கத்தினார்

திடுக்கிட்டு விழித்தபோதுதான்
நினைவுக்கு வந்தது
அம்மா, அப்பா இருவருமே
இறந்துவிட்டார்கள் என்று
இறந்தவர்கள் அனைவருமே என்னிடம்
கோபமும் வருத்தமுமாகத்தான் நடந்துகொள்கிறார்கள்

இன்று முழுக்க நினைத்துக்கொண்டிருக்கிறேன்
அப்பா ஏன் இவ்வளவு துரும்பாக
இளைத்துப் போயிருந்தார் என்று
மேலும் அவரைச் சாவுக்குப் பின்
யாருமே பார்த்துக்கொள்ளவில்லையா என
மனமுடைந்து போகிறேன்

முற்றும்



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com